அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பலாப்பழப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக கேள்வி நேரத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. ஜெயராமன் அவர்கள் நீரா பானத்தைக் கொண்டுவந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் கொடுத்து, நீரா பானத்திற்கு விளம்பரத்தை தேடி, அதற்கு ஒரு பாராட்டைப் பெற்றுவிட்டார். அதேபோன்று, நம்முடைய அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் பலாப்பழத்தை கொடுக்க வேண்டும். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மானியத்தின்போது ஏதாவது கொடுக்கிறார்கள் அல்லவா? அதுபோல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர்கள் எல்லோருக்கும் ஒரு பலாப்பழத்தைக் கொடுத்து விடுங்கள். அதன் பிறகு பலாப்பழத்தைப் பற்றி யோசிக்கலாம். முந்திரி தொழிற்சாலை அமைக்கலாமா, வேண்டாமா என்பதைப் பற்றி உறுப்பினர்கள் சொல்வார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பலாப்பழத்தை கொடுத்து விடுங்கள். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பலாப்பழத்தைச் சாப்பிடுவார் என்றால், கண்டிப்பாக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பலாப்பழம் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 14]

200—

குளிர்சாதனப் பேருந்து

***14145—திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரில் குளிர்சாதன வசதியுடன்கூடிய நகரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11—10

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் குளிர்சாதன வசதி கொண்ட நகரப் பேருந்துகள் இயக்கும் எண்ணம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள்.*

திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் நமக்குத் தந்த கொடைகள் நமது இதய தெய்வம் மனிதப் புனிதர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். அந்த தெய்வங்களால் வளர்த்தெடுக்கப்பட்ட கட்சியையும், ஆட்சியையும், அவர்கள் வகுத்துத்தந்த இலட்சியப் பாதையிலிருந்து இம்மியளவுகூட விலகாமல், உறுதிகொண்ட நெஞ்சுரத்துடன் வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

கோயம்புத்தூர் மாநகராட்சியில் குளிர்சாதன வசதி கொண்ட நகரப் பேருந்துகள் இயக்கும் எண்ணம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். சென்னையில் இயக்கப்படும் சிற்றுந்துகள் போல, கோயம்புத்தூரிலும் சிற்றுந்துகளை இயக்குவதற்கு கருணையோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இயக்கப்படும் சிற்றுந்துகளைப் போல, மாநகராட்சிகளிலும் இயக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்களும், பல்வேறு உறுப்பினர்களும் கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற மாநகராட்சிகளிலும் சிற்றுந்துகள் இயக்குவது குறித்து அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள்.*

திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றுந்துகள் இயக்குவது குறித்து அரசு பரிசீலனை செய்யும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் நகரத்திலிருந்து தாம்பரம் வரை 566 A என்ற எண் கொண்ட 5 நகரப் பேருந்துகள் நாள்தோறும் 10 நடைகள் இயக்கப்பட்டு வந்தன. கடந்த 6 மாத காலமாக அந்தப் பேருந்துகள் நிறுத்தப்பட்டு, திருவள்ளூரிலிருந்து பூந்தமல்லி வரை 597 A என்ற*

2018 ஜூன் 14]

எண் கொண்ட பேருந்துகள்தான் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. ஆனால், தாம்பரம் வரை செல்லும்போது, ஒரு பேருந்துக்கு 10,000 ரூபாய் வசூலானது. இதைமாற்றி, தற்போது பூந்தமல்லி வரைதான் பேருந்துகள் இயக்கப்படுவதால் ஒரு பேருந்துக்கு 7,000 ரூபாய்தான் வசூலாகிறது. ஆனால், திருவள்ளூரிலிருந்து தாம்பரத்திற்கு வேலைநிமித்தமாக ஏழையெளிய மக்களும், படிப்புநிமித்தமாக மாணவர்களும் சென்று கொண்டிருக்கக்கூடிய இந்த வேளையில், ஆறு மாத காலமாக நிறுத்தப்பட்டதை மாற்றி, திருவள்ளூரிலிருந்து தாம்பரம் வரை இந்தப் பேருந்துகளை மீண்டும் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த வழித்தடத்திலே தேவைக்கேற்ப பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்த வழித்தடத்தில், பயணிகளின் அடர்வினை ஆய்வு செய்து, தேவையிருப்பின் அந்த வழித்தடத்தில் பேருந்துகளை மீண்டும் இயக்குவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]